ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

Avoid, the following, while inside a temple

# கோவிலில் தவிர்க்கவேண்டிய அபசாரங்கள்

This is a compendium of Swami Desikan's work, compiled by Sri MadhupayaveThirumalai Chaturveda Shathakrathu Navalpakkam Vasudeva Thathacharya Swami, Thiruvananthapuram

## {ஸ்வாமி ஸ்ரீதேசிகன் தம் நூல்களில் அருளியவற்றின் தொகுப்பு}

(ஸ்ரீமதுபயவே. திருமலை. சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். வாஸுதேவ தாதாசார்ய ஸ்வாமி, திருவனந்தபுரம்.)

---

Although, Perumal forgives our mistakes done due to our ignorance, He does not tolerate the following mistakes.
This was said by Perumal Gnanappiran to Bhoomi Piratti, in Sri Varaha Puranam

பொதுவாக நாம் தெரியாமல் பண்ணும் அபசாரங்களைப் பெருமாள் மன்னித்தாலும், கோவிலுக்குள் நாம் பண்ணும் அபசாரத்தைப் பொறுக்கமாட்டார். இந்த அபசாரங்களை எல்லாம் என் ஸந்நிதியில் பண்ணுபவனை நான் பொறுக்கமாட்டேன் என்பதாக ஸ்ரீவராஹ புராணத்தில் ஞானப்பிரான் பூமிப்பிராட்டியாரிடம் அருளிச்செய்த வார்த்தை.

1. கோவிலுக்குள் வண்டியில் செல்லுதல் கூடாது,
   Do not drive vehicles inside the temple
2. கோவிலுக்குள் கால் செருப்புடன் செல்லுதல் கூடாது,
   Do not wear footwear inside the temple
3. கோவிலுக்குள் உத்ஸவங்களை ஸேவிக்காமல் இருக்கக் கூடாது,
   Do not miss to worship Utsavams inside the temple
4. கோவிலுக்குள் பெருமாளுக்கு எதிரில் ப்ரணாமம் செய்யாமல் (ஸேவிக்காமல்) இருக்கக் கூடாது,
   Do not forget to prostrate in front of Perumal
5. பெருமாளுக்கு ஒரு கையைக் கூப்புதல் கூடாது,
   Do not worship Perumal with single hand, You must use both the palms to perform Anjali
6. பகவானுக்கு எதிரில் தன்னைத் தானே ப்ரதக்ஷிணம் பண்ணுதல் (வலம் வருதல்) கூடாது,
   Do not rotate yourself 360 degree in front of Perumal. Do not do self pradhakshinam

7. எச்சிலுடனோ, தீட்டுடனோ, பெருமாளை ஸேவித்தல் கூடாது,

Do not prostrate Perumal with impurities physically (like without washing hands after eating/ driniking) or otherwise

8. பெருமாளுக்கு எதிரில் காலை நீட்டுதல் கூடாது,

Do not stretch your legs facing Perumal

9. கோவிலுக்குள் படுக்கை கொள்ளக் கூடாது,

Do not lie down inside the temple

10. கோவிலுக்குள் தூங்கக் கூடாது,

Do not sleep inside the temple

11. கோவிலுக்குள் சாப்பிடுதல் கூடாது (பெருமாள் ப்ரஸாதம் மட்டும் சாப்பிடலாம்; ப்ரஸாதம் சாப்பிடும்போதும் கோவிலை அசுத்தம் பண்ணாமல் சாப்பிடவேண்டும்),

Do not eat, except prasadam, inside the temple. Eat prasadam without litering

12. பொய் சொல்லுதல் பொதுவாகவே கூடாது எனினும், பெருமாள் ஸந்நிதியில் கட்டாயம் கூடவே கூடாது,

Do not say lies, and that too in front of Perumal, never!

13. கோவிலுக்குள் உரக்க சத்தம் போடுதல் கூடாது,

Do not make loud noise inside the temple

14. கோவிலுக்குள் வீண் வம்பு அடித்தல் கூடாது,

Do not gossip inside the temple

15. கோவிலுக்குள் அழுதல், ஆர்ப்பாட்டம் செய்தல் கூடாது (நம் கஷ்டங்களும், நமக்குப் பண்ணவேண்டியது என்ன என்பதும் பெருமாளுக்குத் தெரியும்),

Do not cry or shriek inside the temple, Perumal knows our difficulties and He knows what is best to do be done for us.

16. கோவிலுக்குள் சண்டை இடுதல் கூடாது,

Do not fight inside the temple

17. கோவிலுக்குள் நாம் யாரையும் அனுக்ரஹமோ (ஆசீர்வாதம் பண்ணுதல்), நிக்ரஹமோ (சபித்தல்) செய்தல் கூடாது,

Do not bless or curse anyone inside the temple

18. கோவிலுக்குள் பெண்களிடம் ஒரு மாதிரி (உல்லாசமான) எண்ணத்துடன் பேசுதல் கூடாது,

Do not flirt inside the temple

19. கோவிலுக்குள் மோசமான வார்த்தைகளைச் சொல்லக் கூடாது,

We should not speak bad words inside the temple

20. கோவிலுக்குள் அபான வாயு விஸர்ஜனம் (releasing anal gas) கூடாது,

Do not fart inside the temple

21. கோவிலுக்குள் கம்பளி போர்த்திக் கொள்ளுதல் கூடாது,

Do not cover yourself with wool inside the temple

22. கோவிலுக்குள் பிறரை நிந்தித்தல் கூடாது,

Do not speak ill of others inside the temple

23. கோவிலுக்குள் பிறரைப் புகழ்தல் கூடாது,

Do not praise others inside the temple

24. சக்தி இருந்தும் பெருமாளுக்குக் குறைவாக உபசாரம் பண்ணுதல் கூடாது,

Despite having strength do not offer less service, Physically or otherwise

25. பகவானுக்கு நிவேதனம் செய்யாமல் உண்ணுதல் கூடாது,

Never eat anything that is not offered to Bhagavan

26. கிடைப்பதை நிவேதனம் செய்யாமை கூடாது,

We should not ingore to offer (nivedhanam) Perumal, whatever we get, before we eat.

27. விநியோகத்தின் மீதியையே பெருமாளுக்கு மீண்டும் நிவேதனம் செய்தல் கூடாது,

Do not offer to Perumal any remnants after distribution. Do not re-offer the food to Perumal

28. கோவிலுக்குள் பெருமாளுக்குப் பின்பக்கம் காண்பித்து அமர்தல் கூடாது,

Do not sit facing away from Perumal

29. கோவிலுக்குள் பிறரை ஸேவித்தல் கூடாது,

Do not prostrate others inside the temple

30. கோவிலுக்குள் ஆசார்யனிடம் பேசாமல் இருத்தல் கூடாது,

Do not stay quiet but speak to Acharyan inside the temple

31. கோவிலுக்குள் தன்னையே புகழ்ந்துகொள்ளுதல் கூடாது,

Do not blow your own trumpet inside the temple

32. கோவிலுக்குள் தேவதையை நிந்தித்தல் (அந்தக் கோவிலில் உள்ள பெருமாளைப் பற்றியோ அல்லது வேறு கோவில் பெருமாளைப் பற்றியோ நிந்தித்தல்) கூடாது,

Do not speak ill of the temples deities or other temple deities inside the temple

33. எண்ணெய் தேய்த்துக்கொண்டு குளிக்காமல் கோவிலுக்குப் போகக் கூடாது,

Do not visit temple without taking bath after having applied oil for an oil bath.

34. கோவிலுக்குள் நகம், ரோமங்களைக் கிள்ளிப் போடக் கூடாது,

Do not drop cut nails or plucked hair inside the temple

35. கோவிலுக்குள் துப்புதல் கூடாது,

Do not spit inside the temple

36. கோவில் பக்கத்தில் மலமூத்ராதி விஸர்ஜனங்கள் (மலம் கழித்தல் & சிறுநீர் கழித்தல்) பண்ணக் கூடாது,

Do not urinate or defecate near the temple

37. விமான நிழலை மிதிக்கக் கூடாது,

Do not step on the shadow of the temple's gopuram/vimanam (tower)

38. கோவில் விளக்கை அணைக்கக் கூடாது,

Do not put off the temple lamp.

39. கோவிலில் பகவத் கதைகளோ, பகவந் நாம ஸங்கீர்த்தனமோ பண்ணும்போது அதை அலக்ஷ்யம் பண்ணக் கூடாது,

Do not neglect or ignore when stories or names of Bhagavan are being told/recited/sung

40. பெருமாளை வேறு தேவதைகளுக்கு ஸமானமாக நினைத்துப் பேசவோ நடந்துகொள்ளவோ கூடாது,

Do not equate Perumal to other devathas / deities

41. பகவானுக்கு வைத்த புஷ்பம் முதலியவற்றை முகர்ந்து பார்க்கக் கூடாது,

Do not smell the flowers that was offered to Bhagavan

42. கோவிலில் பிறர் நம் மேல் பட்டதற்காக ஸ்நானம் பண்ணக் கூடாது (கோவிலில் எல்லோரும் சுத்தமானவர்களே),

Do not take purificatory bath for someone having touched us, inside the temple, All are clean when inside a temple.

43. பொதுவாக நாம் எதைச் சாப்பிட்டாலும் ஆசமனம் பண்ணவேணும் என்பதற்காகப் பெருமாள் தீர்த்தம் சாப்பிட்ட பின் ஆசமனம் பண்ணக் கூடாது,

We need to peform Achamanam whenever we finished eating, but do not do so after taking Perumal theertham

44. பகவத் விக்ரஹம் எந்த உலோகத்தால் செய்யப்பட்டது என்றோ, அது செய்ததற்கான விகிதாசாரங்கள் என்ன என்பது பற்றியோ கேட்கக் கூடாது,

Do not enquire about what metal or the composition of metals were used in making the vigrahas of Perumal

45. கோவிலுக்குள் லௌகிக ப்ரபுக்களின் பின்னாலேயே சென்று அவர்களுக்குப் பெரிய உபசாரம் எல்லாம் பண்ணக் கூடாது,

Do not praise the affluent or serve them in a big way, inside the temple

########################